**Minutes of the meeting of public hearing held on 23.03.2010 at 11.30 am regarding Integrated Solid Waste Management Facility at Perungudi Landfill site, Pallikaranai Village, Kancheepuram.District**

**Present**

1. District Collector, Kancheepuram District,

2. District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar welcomed all those who came to participate in the public hearing meeting.

The District Collector addressed that the Commissioner, Corporation of Chennai will make a presentation about the proposed Integrated Solid Waste Management Facility in 30 acres of land in the existing Perungudi Dump site and thereafter the public may express their views in brief with clarity.

The Commissioner, Corporation of Chennai delivered power point presentation explaining the salient features of the project comprising the aim and object of the project, the approvals and sanctions obtained in administrative level, stages of bid process management and selection of developer for the project and the requirement of the environmental clearance for the project. The Commissioner, presented the components of the project as below.

Solid Waste Segregation

Composting of bio-degradable waste
Eco bricks manufacturing
Recyclable materials

Process Description

Layout showing the location of
1. Compost Plant,
2. Composting Machinery,
3. Eco Brick Manufacturing
4. Greenbelt development etc.

He also explained the features of the similar solid waste management facility for which clearances were already issued for the Projects at Madurai, Coimbatore and Vengadamangalam near the project site and he explained the benefits of the project.

The following is the brief of views expressed by various persons during the Public hearing .

**1) Thiru. M. Subramanian, Worshipful Mayor, Corporation of Chennai,**

The Worshipful Mayor stated that the garbage disposal is a problem now and every one knew that the Council of Corporation of Chennai after assuming charge, under the financial assistance of the Government of India and the Government of Tamil Nadu procured about 200 Compactor Equipments for the transportation of compacted garbage in covered manner without giving room for odour and spillage enroute. The garbage transfer stations were improved as Modern Transfer Stations at a cost of Rs.10 crores. There are two garbage dumping grounds for the Corporation of Chennai one at Perungudi and another at Kodungaiyur.

By the year 2011, the Chennai City will become Greater Chennai, amalgamating 8 Municipalities, 9 Town Panchayats and 25 Panchayats including Perungudi and Alandur Municipality and its area will be increased to 426 Sq.kilometer. At present 1500 Metric Tonne of garbage is disposed at the Perungudi Dumping Ground. The project is designed to the cost of Rs.50 crores. The project for which the public hearing meeting is conducted here is a dawn to the problem of Perungudi area. Only 30 acres of land is required for this project as against the existing area of 125 acres where Corporation of Chennai is carrying out garbage disposal activities. The remaining 95 acres of land will be remediated with greenery and vegetation.

It is proposed to manufacture bricks and manure from the garbage. Further, Chennai Corporation is procuring segregated plastic waste from the public by giving Rs.2 per kg to the public in Anna Nagar area. The said scheme will be extended to other areas of Chennai City. This Integrated Solid Waste Management Project will be implemented at a cost of Rs.50 crores by the “Developer”. I wish to state that the said project is a prestigious one to the Corporation of Chennai as well as to the State of Tamil Nadu.

**2) Thiru. R.S. Bharathi(Former President, Alandur Municipality)**

Thiru. R.S. Bharathi stated that the Commissioner and Worshipful Mayor explained about the project in detail. The people of Perungudi is living as if they are living in the hell. But this status will be changed by this project and hence this project is with a great motive. I express my thankfulness to the implementation of the project. I also request that proper precaution may be taken for vector control in the project to avoid nuisance to the public. I suggest a monitoring committee including the representatives from the public has to be constituted for monitoring the implementation of the project. I request that the media shall create awareness about the importance of the project.

**3) Thiru. K. R. P. Rudran, Perungudi**

I have visited all States. There is no such projects like this anywhere. The Chennai is now looking like a foreign country. The State Government and the Corporation of Chennai are jointly trying to implement the project to make the state as a best one. We all will benefit from the project. A dumping ground for garbage management is important as like toilet in our house. We have to maintain the garbage dumping ground with cleanliness as we maintain our toilet in our home.

**4) Thiru. S.V. Sekar, Member of Legislative Assembly**

I pay my respect to every one. I am informed that if the garbage is disposed in lake area, the under ground water will be affected. Therefore, we have to implement the project to avoid the same. Three digit telephone facility to be extended to the public to air their grievances regarding garbage handling. I am also ready to allocate if any fund is required for implementing the project from out of my MLA's Constituency Improvement Scheme.

**5) Thiru. Mangalraj, No.21, Rajiv Gandhi Salai, Perungudi**

I am living here from 1986 onwards. Now there is no mosquitoe menace in this area. There is no chance for ground water contamination since this project will be implemented with concrete flooring. This is not a catchment area. Extent of land is reduced to 30 acres from 125 acres. Greenery will be formed with tree planting and health of the people is protected. Considering the life of the 55 lakh people, I request that support may be given to this project.

**6) Thiru. Sivalingam, Exnora**

Welcomed the project

**7) Thiru. Saravanan, Vijayanagar,**

Already the project is under implementation in Coimbatore. This project shall be implemented speedily.

**8) Selvi Soundararajan, Council Member**

I welcome the project without going for new land and request to implement the project speedily.

**9) Ms. Swedha, Besant Nagar**

Pallikaranai area will become damaged. The project is not correct. The project is against the law.

**10) Ms. Vimala, Ram Nagar, Velachery**

This area shall be protected. Environment will be damaged. There is no control. So, this project shall not be implemented here. Garbage segregation had not been so far implemented.

**11) Thiru. Nithyananda Jayaraman**

The Environmental Impact Assessment Report has not been prepared as per Appendix.3 of EIA Notification 2006. Only segregated garbage has to be collected. The solid waste management facility shall not be implemented in the marsh land.

**Commissioner, Corporation of Chennai,** answered that since this land is in use as garbage disposal ground from 1972 onwards and hence this land has been selected and the project will be implemented in accordance with the MSW Rules.

**12) Thiru. Pencillaiah, Sanitary worker, Corporation of Chennai**

This is a good scheme and it has to be implemented expediously.

**13) Thiru. Srinivasan, Pallikaranai Marsh land Protection Movement**

The project implementing company had been debarred by the Goa State Government. It may be reviewed that the selection of the above developer is correct?

**14) Thiru. Devarajan, Pulianthope:**

Welcomed the project.

**15) Thiru. Badrinath**

He said that the Tamil Nadu Pollution Control Board shall monitor the project and enquire that how the pollution will be controlled while manufacturing cement and manure.

**Commissioner, Corporation of Chennai** replied that the Cement is not going to be produced in the project site and the manure produced will not pollute the environment and it is eco friendly and also there is no incineration.

**16) Thiru. Batcha, Velachery**

Welcomed the project.

**17) Ms. Meeravenkataraman**

Welcomed the project

**18) Tmt. Malarkodi, Thiruvanmiyur**

Welcomed the project

**19) Thiru. Kuppan,**

Welcomed the project

**20) Thiru. Dhanasekaran, Velachery**

Welcomed the project

**21) Ms. Madumitha, Besant Nagar**

The technology adopted in the solid waste management project at Delhi, Hydrabad and Luknow is not a successful one.

**Commissioner, Corporation of Chennai** replied that the above mentioned Projects are involving incineration, but in this Project, there is no incineration and it involves production of Refuse Derived Fuel upto bale formation and same will be sent to Cement Industries.

**22) Thiru. Saidai Ravi(alias) Rangaramanujam,**

Already in Chennai Corporation there is a prohibition that there shall be no affixture of postures. Number of Bridges have been constructed and traffic conjunction had been reduced. Similarly at Perungudi in future it will not be a garbage dumping yard. This project is designed to implement to restore the cleanliness of the area. It cannot be accepted to oppose before it comes. This is a very good project. I request every one to support the project.

**23) Thiru. Thiruvenkadam**

The Perungudi Dumping Ground is in existence for the past 30 years. It is our duty to welcome this project proposed to be implemented by the Corporation of Chennai and the Government of Tamil Nadu. I request that this project has to be implemented fully.

**24) Thiru. Parasuraman, TVH, Villa**

If this project is implemented there will be traffic congestion. Therefore I object the project.

**25) Thiru. Muthukumar**

I welcome the project on behalf of the washer men professionals. As this is a good project, I request all to support this project

**26) Thiru. Kumaravel, Sanitary Inspector(Rtd)**

It is true that the existing system is affecting the public. I request to support the proposed new project to remove the garbage from the Perungudi and remediate it.

**27) Thiru. Vaira Sekar, K.K. Nagar Welfare Sangam**

There shall be no power generation. I support this project as the garbage has to be given to the Cement Industries.

**Commissioner, Corporation of Chennai** replied that there is no proposal to generate power in this Project unlike in Delhi and also he stated that the Tamil Nadu Pollution Control Board permits the incineration of plastic in Cement Factories and this has been communicated by TNPCB through a D.O. letter.

**28) Thiru. Ramasamy, Thuraipakkam**

No project of this kind has been successful anywhere. So I oppose this project

**29) Thiru. Sivakumar, Thuraikakkam**

He stated that this project may be taken to a place beyond 50 KM.

**30) Thirumathi. Malathi, Medavakkam**

I support this project on behalf of Exnora, Velachery.

**31) Thiru. Samraj**

This project is a wrong one. This has to be given up.

**32) Thiru. Narayanan Kutty**

This is a good project. This may be implemented anywhere other than in marsh land.

**33) Thiru. Narayanan, K.K. Nagar**

I request all to extend their cooperation for this project.

**34) Thirumathi Lalitha, Lakshmipuram, Women Self-help group.**

All should support this good project.

**35) Thirumathi Seetha, Thuripakkam,**

She welcomed the Project but stated that since there are IT offices, Hospitals and Colleges near the project site and hence the Project may be shifted to some other place.

**36) Thiru. Pon Kalaimani, Exnora**

This is a good project. There is clarity. This has to be welcomed.

**37) Thiru. Alphonsraj, Vettuvankeni**

Opposed the project and said that as there is already water inadequacy, this project shall not be implemented in waterbodies.

**38) Thiru. Nandakumar, Adayar, Gandhi Nagar**

He did not object to the project but stated that since the project is proposed to be implemented at a cost of Rs.50 crores it may be implemented in some other area.

**39) Thiru. Maharajan, Velachery**

He supported the project by saying that it is a good project. But this need not be implemented in marsh land. Therefore, it has to be reviewed whether this has to be implemented in the present site.

**40) Thirumathi Selvi.**

Thanked supporting the project

**41) Thirumathi. Chitra**

Persons affected will be few. We should welcomed a project which is beneficial for many. Public must extend their support for this project

**42) Thirumathi. Keran, Besant Nagar**

She welcomed the scheme but she stated that the garbage has to be brought duly segregated.

**43) Thiru. Arumainathan, Virugambakkam**

Welcomed the project.

**44) Thiru. Fazulullahkhan, S.E. (Retd.), Besant Nagar**

Supported the project

**45) Thiru. K.L. Arun, Thuraipakkam**

This seems to be like a praising meeting unlike public hearing. I oppose the project.

**46) Thiru. Swaminathan, Chief Engineer(Rtd), Madipakkam**

No land is available. For the past 10 to 12 years it has been tried to implement the project and due to opposition this project could not be implemented. This project has to be supported. A committee shall be constituted to implement the project. Everyone shall cooperate.

**47) Thiru. Srinivasan, Thiruvanmiyur**

Opposed the project and said that dumping ground may be shifted to some other place. This project has to be reviewed before implementation.

**Commissioner, Corporation of Chennai** stated that the Corporation of Chennai is disposing the garbage for the last 30 years. The project is not going to be implemented in a new site but it is going to be implemented in a place which is used for dumping the garbage for the last 3 decades. As the garbage will be composted in this project, there will be no impact.

**48) Thirumathi. Akila,**

She did not object the project but she stated that the disposal of garbage in the water bodies shall be avoided. The project shall not be implemented in this place and alternate site may be selected.

**49) Thiru. Arokyaraj, Exnora International**

Supported the project

**50) Thiru. Anbumani, Doctor**

Opposed the project. He said that as per the health study conducted there is a health hazard in that area. Garbage shall not be dumped in the marsh land. The breast milk of mothers becomes poisonous.

**Commissioner, Corporation of Chennai** replied that there is no proven study to support this statement.

**51) Thiru. Ramachandran**

Supported the project

**52) Thirumathi. S.M. Vempathal, Councillor, Ward 41.**

Welcomed the project

**53) Thiru. Durairaj, Councillor,**

Supported the project and requested to implement the project speedily.

**54) Thiru. Srinivasan**

Good Project. He thanked.

**55) Thiru. Rajkumar**

Supported the project.

**56) Thiru. Kumar, Exnora**

Supported the project.

**57) Thirumathi. Annapoorani Mohan, Perungudi**

The project has to be implemented speedily. Thanks to the Corporation.

**58) Ms. Santhi, Councillor, Ward 155**

The project has to be implemented speedily. Thanks to the Corporation.

**59) Thiru. Srinivasan, Secretary Colony**

Excellent Project

**60) Thiru. Dhanasekaran, Councillor, Ward 130**

Good Project. I welcome. This has to be implemented speedily.

**61) Thiru. Stanley**

He supported the scheme and stated that since Corporation of Chennai has excelled in constructing many flyovers in the City this project may also be implemented to solve the problem of the dumping of garbage.

**62) Thiru. Periasami, Chairman, Sai Nagar Association**

As per the Municipal Solid Waste rules, there shall be source segregation. Garbage shall not be burnt. The implementation of the project near water body is against the law. For implementing this project 3 acres of land is sufficient. In the city itself in 10 places the project may be implemented.

**63) Thirumathi. P. L. Kalyani, Councillor, Ward 39.**

Supported and welcomed the project and thanked.

To sum up the **Commissioner, Corporation of Chennai** stated that the project involves segregation of waste, composting bio-degradable waste, production of Refuse Derived Fuel upto bale formation from combustible waste, manufacture of eco bricks using the inerts and it is going to be implemented in the existing dump site which is being used for the last 30 years – complying with the Municipal Solid Waste (Management and Handling) Rules, 2000. He also informed that the Council of Chennai Corporation has already resolved to implement the scheme of segregating the wastes at the source level during the financial year 2010-11 and whatever the waste received will be processed.

Finally, District Collector, Kancheepuram District, informed that the views expressed by the public as well as officials have been recorded and concluded the meeting.

As per the attendance register 790 people attended the public hearing. Out of the 63 people who spoke and expressed their opinion – 48 of them supported the project; 8 of them opposed the project and 7 of them remained neutral.

The attendance register of the participants, their written submissions and recorded video coverage of public hearing in compact disc are appended herewith.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Maraimalai Nagar, Kancheepuram District.**

**District Collector,**
**Kancheepuram District.**

**23.3.2010 அன்று காலை 11.30 மணியளவில் சென்னை மாநகராட்சி – ஒருங்கிணைந்த நகர திடக்கழிவு செயலாக்க நிலையம், பெருங்குடி நில நிரப்புப் பகுதி – பள்ளிக்கரணை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம், பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை**

**<u>கூட்டக்குறிப்புரை</u>**

**முன்னிலை**

1) **மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம்**
2) **மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், மறைமலை நகர்,**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் மறைமலை நகர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்

அடுத்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் 30 ஏக்கர் இடத்தில் செயல்படுத்தப்படவுள்ள புதிய திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்து சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்படும் எனவும் அடுத்ததாக இத்திட்டம் குறித்து கருத்து தெரிவிக்க விரும்புவோர் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்க கேட்டுக் கொண்டார்.

ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயல்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

திட்டம் குறித்த கூறுகள், பெறப்பட்ட ஒப்புதல்கள், திட்டத்தை செயல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஒப்பந்தப்புள்ளி நடைமுறையும் மற்றும் ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுத்தலும், சுற்றுச்சூழல் இசைவுச் சான்று, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் திடக்கழிவுகளின் அளவு ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் நோக்கம், ஆகியவற்றை விளக்கி, திடக்கழிவு மேலாண்மையின் செயல்முறை விளக்கத்தை கீழ்கண்டவாறு எடுத்துரைத்தார்.

குப்பைகளைப் பிரித்தெடுத்தல்

- மக்கக் கூடிய குப்பைகளை உரமாக மாற்றுதல்,
- கட்டுமான செங்கற்கள் உருவாக்குதல்
- மறுசுழற்சிக்கான பொருட்கள்

**<u>செயல்முறை விளக்கம்</u>**
திட்டம் அமைய உள்ள இடத்தின் வரைபடத்தில்
- உரம் தயாரிக்கும் தொழிற்சாலை
- உரமாக்கும் இயந்திரம்
- கட்டுமான செங்கற்கள் உருவாக்குதல்
- எரிகட்டிகள் தயாரித்தல்
- பசுமையான சுற்றுப்புறம் ஏற்படுத்துதல் போன்றவை குறித்து விளக்கினார்

திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்ட பிற திட்டங்களான மதுரை, கோவை மற்றும் இதன் அருகே உள்ள வேங்கடமங்கலத்தில் அமைய உள்ள சீரமைக்கப்பட்ட குப்பை கொட்டும் வளாகம் குறித்து விளக்கினார். மேலும், இத்திட்டம் செயல்படுத்துவதால் கிடைக்கும் பயன்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்

பொதுமக்கள் கருத்துகேட்டுணரும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் கீழ்கண்டவாறு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்

**1) திரு.மா.சுப்பிரமணியன், மேயர், சென்னை மாநகராட்சி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டம் எதற்காக நடைபெறுகிறது என்றால் குப்பை என்பது மிகப் பெரிய பிரச்சனை என்பதை நாம் அனைவரும் அறிவோம். இந்த நிர்வாகம் பொறுப்பேற்றதற்குப் பின்னர் மத்திய, மாநில அரசின் நிதி மூலம் மூடி அழுத்தி செல்லக்கூடிய லாரிகள் வாங்கி இந்த குப்பையை துர்நாற்றம் இல்லாமல் பாதுகாப்பான நிலையில் குப்பை கொட்டும் வளாகத்திற்கு எடுத்து செல்லப்படுகிறது. ஏற்கெனவே உள்ள குப்பை மாற்று நிலையங்களை ரூபாய் பத்து கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு நவீனப்படுத்தப்பட்டு சென்னை மாநகரில் குப்பைகளே இல்லாத நிலை உருவாகி இருக்கிறது. சென்னையில் இரண்டு குப்பை கொட்டும் வளாகங்கள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ளது.

2011–ல் பெருங்குடி ஆலத்தூர் உள்ளிட்ட ஒன்பது நகராட்சிகள், எட்டு பேரூராட்சிகள், 25 ஊராட்சிகள் சென்னை மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டு 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மெகா சென்னை மாநகராட்சியாக உருவாக இருக்கிறது. தற்போது 1500 டன் குப்பைகள் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. ரூ.50கோடி செலவில் இந்த திட்டம் உருவாக இருக்கிறது. பெருங்குடி குப்பை கொட்டும் நிலையத்திற்கு ஒரு விடிவு என்கிற வகையில் தான் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 125 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் வெறும் 30 ஏக்கரில் மட்டுமே குப்பைகள் கொட்டப்படும் என்றும் மீதி 95 ஏக்கர் பசுமைப்படுத்தப்பட்ட பகுதியாக உருவாக்கப்பட்டு எதிர்காலத்தில் இது போன்ற இடம் வேறு எங்கும் இல்லாத நிலை உருவாக்கப்படும்.

இந்த குப்பையிலிருந்து உரம், செங்கற்கள் முதலியன தயாரிக்கப்பட உள்ளது என்றும், அண்ணா நகரில் ஒரு கிலோ பிளாஸ்டிக் சேகரித்து கொடுத்தால் ரூபாய் இரண்டு கொடுத்து சென்னை மாநகராட்சியால் வாங்கப்படுகிறது. இந்த திட்டம் சென்னை மாநகரில் அனைத்து இடங்களிலும் விரிவாக்கப்படும். இத்திட்டம் ரூபாய் 50 கோடிசெலவில் தொழில் முனைவோர் அவர்கள் மூலம் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் செயலாக்கப்பட்டு சீரமைக்கப்பட உள்ளது. இந்த திட்டம் சென்னை மாநகரத்திற்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்க்கின்ற ஒரு மிகப் பெரிய திட்டம் என்பதை இக்கூட்டத்தின் மூலம் பதிவு செய்கிறேன்.

**2) திரு ஆர்.எஸ்.பாரதி (முன்னாள் தலைவர் ஆலந்தூர் நகராட்சி)**

அனைவருக்கும் நன்றி தெரிவித்து, எனக்கு முன்னால் பேசிய ஆணையாளர் அவர்களும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் இந்த திட்டம் குறித்து மிக விரிவாக விளக்கம் அளித்தார்கள். பெருங்குடியை பொறுத்த வரையில் அந்த பகுதியில் வாழ்கிற மக்கள் நரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் போல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது உன்னதமான ஒரு திட்டம். இந்த திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்காக நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். உரிய நடவடிக்கை எடுத்து சுற்றுப்புற மக்களுக்கு பூச்சிகள், கொசுக்கள் வராதபடி இந்த திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக்

கொள்கிறேன். பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஒரு Monitoring Committee நியமிக்கப்பட்டு அந்த குழுவில் மக்கள் பிரதிநிதிகள் சேர்க்கப்பட்டு இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும். பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மக்களுக்கு இந்த திட்டம் சம்பந்தமாக ஒரு விழிப்புணர்வு ஏற்படுமாறு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

**3) திரு கே.ஆர்.பி.ருத்ரன், பெருங்குடி**

நான் அனைத்து மாநிலங்களையும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். இது போன்ற திட்டம் வேறு எங்கும் இல்லை. சென்னை மாநகரம் இப்போது வெளிநாடு போல் இருக்கிறது. மாநகராட்சியும், தமிழக அரசும் இணைந்து சிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்று இந்த திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறார்கள். இதனால் நாம் அனைவரும் பயன் அடைவோம். ஒரு வீட்டில் எப்படி கழிவறை முக்கியமோ அது போல் குப்பை கொட்டும் வளாகமும் நம் அனைவருக்கும். முக்கியம். நாம் நம் வீட்டு கழிவறையை எவ்வாறு சுத்தமாக பராமரிக்கிறோமோ அதே போல் குப்பை கொட்டும் வளாகத்தையும் சுத்தமாக பராமரிக்கப்பட வேண்டும்.

**4) திரு எஸ்.வி.சேகர், சட்டமன்ற உறுப்பினர்**

அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, குப்பையை ஏரியில் கொட்டுவதால் நிலத்தடி நீர் மாசுபடும், எனவே அவ்வாறு இல்லாமல் இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டும். குப்பையை கையாளும்போது ஏற்படும் இடர்பாடுகள் குறித்து பொதுமக்கள் சென்னை மாநகராட்சிக்கு தெரிவிக்கும் விதமாக மூன்று எண்கள் கொண்ட தொலைபேசி எண் கொடுக்கப்பட வேண்டும். இத்திட்டத்திற்காக தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தொகை ஒதுக்க விருப்பம் தெரிவிக்கிறேன்.

**5) திரு சு.மங்கள்ராஜ், 21 ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி**

நான் 1986–லிருந்தே குடியிருந்து வருகிறேன். தற்போது கொசு தொல்லை இல்லாமல் இருக்கிறது. கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்த இருக்கிறபடியால் நிலத்தடி நீர் மாசுபட வழியே கிடையாது, இது நீர்பிடிப்பு இடமும் இல்லை. 125 ஏக்கர் நிலம் 30 ஏக்கராக சுருங்குகிறது. 95 ஏக்கர் பசுமைப்படுத்தப்பட்டு மரம் வைத்து சுகாதாரம் பேணி பாதுகாக்கப்பட உள்ளது. 55 இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை சீர்தூக்கி பார்த்து மக்களுடைய ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**6) சிவலிங்கம் –எக்ஸ்னோரா**

திட்டத்தை ஆதரித்து ப் பேசினார்

**7) சரவணன், விஜயநகர்**

ஏற்கனவே கோவையில் இத்திட்டம் நடைபெற்று வருகிறது. விரைவாக சென்னையிலும் நடத்தப்பட வேண்டும்

**8) செல்வி சௌந்தரராஜன், மன்ற உறுப்பினர்**

புதிதாக இடத்தை எடுக்காமல் செய்யப்படுவதற்கு வரவேற்பு தெரிவித்து விரைவாக செயல்படுத்த கேட்டுக் கொண்டார்.

**9) ஸ்வேதா, பெசண்ட் நகர்**

பள்ளிகரணை பாழாகிறது. திட்டம் சரியல்ல. திட்டம் சட்டத்திற்கு புறம்பான திட்டம்

**10) விமலா, ராம்நர், வேளச்சேரி**

இடம் பாதுகாக்கப்படவேண்டும் சுற்றுச்சூழல் பாழாகிறது. கட்டுப்படுத்தப்படவில்லை. இங்கே இத்திட்டம் செயல்படுத்தக் கூடாது. குப்பை தரம் பிரித்தளிக்கும் திட்டம் இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

**11) நித்தியானந்த ஜெயராமன்**

Appendix -3ன்படி சுற்றுசூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தயாரிக்கப்படவில்லை தரம் பிரிக்கப்பட்ட குப்பை தான் சேகரிக்கப்பட வேண்டும். திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் சதுப்பு நிலப்பகுதியில் செயல்படுத்த கூடாது.

**ஆணையாளர்,** சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைக்காக தேர்வு செய்யப்பட்ட இடம் 1972 முதல் குப்பை கொட்டும் இடமாக திகழ்வதால் இவ்விடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் MSW விதி முறைகளின்படி இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

**12) பென்சிலய்யா, மாநகராட்சி துப்புரவு பணியாளர் :**

நல்ல திட்டம். விரைவில் நிறைவேற்றப்படவேண்டும்.

**13) சீனிவாசன், பள்ளிக்கரணை : சதுப்பு நில பாதுகாப்பு இயக்கம்:**

திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ள நிறுவனம் கோவா மாநில அரசால் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட ஒன்றாகும். மேற்கண்ட நிறுவனத்தை தேர்வு செய்யப்பட்ட முறை சரியா ? என்று ஆய்வு செய்யவும்.

**14) தேவராஜன், புளியந்தோப்பு :**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்

**15) பத்ரிநாத்,**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இதை கண்காணிக்க வேண்டும் சிமெண்ட், உரம் தயாரிக்கும்போது வரும் மாசுவை எப்படி கட்டுப்படுத்துவீர்கள் ? என வினவினார்.

இதற்கு ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் பதிலளித்து, இவ்விடத்தில் சிமெண்ட் உற்பத்தி செய்யப்படபோவதில்லை என்றும் மேலும் இங்கு உருவாக்கப்படும் எருவால் சுற்று சூழல் பாதிக்கப்படாது என்றும், மேலும் இங்கு எரிகட்டிகள் எரிக்கப்பட மாட்டாது என்றும் விளக்கம் அளித்தார்.

**16) பாட்சா, வேளச்சேரி**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்.

**17) மீரா வெங்கட்ராமன், மன்ற உறுப்பினர்**

திட்டத்தை ஆதரித்துப் பேசினார்

**18) திருமதி மலர்கொடி, திருவான்மியூர்**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்

**19) குப்பன்**

ஆதரித்து நன்றி தெரிவித்தார்

**20) திரு தனசேகரன், வேளச்சேரி**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்.

**21) மதுமிதா, பெசன்ட் நகர் :**

திடக்கழிவு மேலாண்மைக்கான தொழில்நுட்பம் டெல்லி, ஐதராபாத் மற்றும் லக்னோ ஆகிய இடங்களில் வெற்றிபெறவில்லை என தெரிவித்தார்.

இதற்கு ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் பதிலளிக்கையில் மேற்கண்ட இடங்களில் செயல்படும் திட்டங்களில் குப்பையை எரிக்கப்படுவதாகவும், ஆனால் இங்கு செயலாக்கப்படும் திட்டத்தில் குப்பை எரிக்கப்படமாட்டாது என்றும் எரிகட்டிகள் தயாரிக்கப்பட்டு அவை கட்டுகளாக சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

**22) சைதை திரு ரவி (எ) ரங்கராமானுஜம்**

ஏற்கனவே சென்னையில் போஸ்டர்கள் ஒட்டக் கூடாது என்ற நிலை உள்ளது. பல பாலங்கள் கட்டி போக்குவரத்து நெரிசல் இல்லாமல் செய்திருக்கிறோம். அது போல் பெருங்குடியில் வரும் காலங்களில் குப்பைக் கொட்டும் இடமாக செயல்படாது. இங்கு ஏற்கனவே உள்ளதை சுத்தப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திற்காகத்தான் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் வரவேற்கக் கூடியது. இந்த திட்டம் வருவதற்கு முன்னரே இதனை எதிர்ப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. இந்த திட்டம் மிக நல்ல திட்டம். எனவே , இதற்கு அனைவரும் ஆதரவு அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**23) திரு திருவேங்கடம்**

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் 30 ஆண்டுகளாக குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சி மற்றும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இந்த நல்ல திட்டத்தை வரவேற்பது நம்முடைய கடமை. இந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**24) திரு பரசுராமன், TVH Villa**

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் வாகன நெரிசல் ஏற்படும், அதனால் இந்த திட்டத்தை ஆட்சேபிக்கிறேன்.

**25) திரு. முத்துக்குமார்**

சலவை தொழிலாளர்கள் சார்பில் இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறோம். இந்த திட்டம் நல்ல திட்டமாக, மக்களுக்கு பயன்படுகிற இந்த திட்டத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**26) திரு. குமாரவேல், துப்புரவு ஆய்வாளர், ஓய்வு**

தற்போதுள்ள நிலையில் தான் பாதிப்பு இருக்கிறது என்பது உண்மை. மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் இப்புதிய திட்டத்தின் மூலம் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ஏற்கனவே குப்பை கொட்டப்பட்ட நிலப்பரப்பினை சுத்தப்படுத்த உள்ள இந்த திட்டத்தை வரவேற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**27) திரு. வைர சேகர், கே.கே.நகர் நலச் சங்கம்**

மின் உற்பத்தி செய்யக் கூடாது, சிமெண்ட் ஆலைகளுக்கு குப்பைகளை கொடுப்பதால் இந்த திட்டத்தை ஆதரிக்கிறேன்.

இதற்கு ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் பதிலளிக்கையில் டெல்லியில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தில் மின்சாரம் தயாரிக்கப்படுவது போல் சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தில் மின்சாரம் தயாரிக்கப்பட போவதில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது நேரடி கடிதத்தின் மூலம் பிளாஸ்டிக்கை சிமெண்ட் ஆலைகளில் எரிக்கப்படுவதை அனுமதித்துள்ளது.

**28) திரு ராமசாமி, துரைபாக்கம்**

இது போன்று செயல்படுத்தப்பட்டுள்ள எந்த திட்டமும் வெற்றிபெறவில்லை. அதனால் எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

**29) திரு. சிவகுமார், துரைபாக்கம்**

இவர் 50 கிலோ மீட்டர் தள்ளி இந்த திட்டத்தை செயல்படுத்த கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

**30) திருமதி மாலதி, மேடவாக்கம்**

வேளச்சேரி Exnora International சார்பாக இந்த திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறோம்

**31) திரு சாம்ராஜ்**

இந்த திட்டம் தவறான திட்டம். இந்த திட்டத்தை கைவிட வேண்டும்.

**32) திரு நாராணன்குட்டி**

இந்த திட்டம் நல்ல திட்டம், இதனை சதுப்பு நிலத்தில் செயல்படுத்தாமல் வேறு இடம் தேர்வு செய்து செயல்படுத்தப்பட வேண்டும்.

**33) திரு. நாராயணன், கே.கே.நகர்**

இந்த திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**34) திருமதி லலிதா, லட்சுமிபுரம், மகளிர் சுய உதவி குழு**

சிறப்பான இந்த திட்டத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டும்.

**35) திருமதி சீதா, துரைபாக்கம்**

இவர் இத்திட்டத்தை வரவேற்றார். ஆனால் IT அலுவலகங்கள், மருத்துவமனைகள் மற்றும் கல்லூரிகள் இருப்பதால் வேறு இடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

**36) திரு. பொன்கலைமணி, Exnora**

இது நல்ல திட்டம், சரியாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதனை வரவேற்க வேண்டும்.

**37) திரு. அல்போன்ஸ்ராஜ், வெட்டுவாங்கேணி**

இந்த திட்டத்தை ஆட்சேபணை தெரிவித்ததோடு ஏற்கனவே தண்ணீர் தட்டுப்பாடு இருப்பதால் இந்த திட்டத்தினை நீர்நிலைகளில் செயல்படுத்தக் கூடாது என்று தெரிவித்தார்.

**38) திரு. நந்தகுமார், அடையார், காந்தி நகர்**

இந்த திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால் **50** கோடி செலவில் செயல்படுத்தப்படக் கூடிய இந்த திட்டத்தை வேறு இடத்தில் நிறைவேற்ற வேண்டும்.

**39) திரு. மகாராஜன், வேளச்சேரி**

இந்த திட்டம் நல்ல திட்டம். இந்த மாதிரி திட்டத்தை சதுப்பு நிலத்தில் செய்யக் கூடாது என்று கூறினார். இந்த திட்டம் இவ்விடத்தில் செயல்படுத்த வேண்டுமா என்று ஆலோசிக்க வேண்டும்.

**40) திருமதி.செல்வி :**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்

**41) திருமதி.சித்ரா :**

பாதிக்கப்படுபவர்கள் குறைவுதான். பெருவாரியான மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய இத்திட்டத்தை நிறைவேற்ற பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

**42) திருமதி.கேரன், பெசன்ட் நகர்:**

இத்திட்டத்தை வரவேற்றார். ஆனால் குப்பை பிரிக்கப்பட்டு கொண்டு வரப்பட வேண்டும் என தெரிவித்தார்.

**43) அருமைநாதன், விருகம்பாக்கம் :**

திட்டத்தை வரவேற்று பாராட்டி பேசினார்.

**44) திரு.பசுல்லா கான் :**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்.

**45) திரு.கே.எல்.அருண், துரைப்பாக்கம்:**

public hearing போன்று அல்லாமல் இது ஒரு பாராட்டு விழா போன்று உள்ளது. திட்டத்தை ஆட்சேபித்தார்.

**46) திரு.சுவாமிநாதன், மாநராட்சி தலைமைப் பொறியாளர்(ஓய்வு) –**

வேறு இடம் கிடைக்கவில்லை. 10, 12 ஆண்டுகளாக திட்டம் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டு ஆட்சேபம் காரணமாக செயல்படுத்த முடியவில்லை. திட்டத்திற்கு ஆதரவு தர வேண்டும். திட்டத்திற்கு குழு அமைத்து செயல்படுத்தப்பட வேண்டும். அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**47) திரு.சீனிவாசன், திருவான்மியூர்:**

திட்டத்தை ஆட்சேபித்து, குப்பை கொட்டும் இடத்தை வேறு இடத்திற்கு மாற்றலாம். திட்டத்தை மீண்டும் ஆலோசித்து செயல்படுத்த வேண்டும்.

**ஆணையாளர், சென்னை மாநகராட்சி**

கடந்த 30 வருடமாக இங்கு குப்பை கொட்டப்பட்டு வருகிறது. ஏற்கனவே கடந்த 30 வருடங்களாக நடைமுறையில் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இவ்விடம் புதியதாக தேர்வு செய்யப்பட்ட ஒன்று அல்ல. இத்திட்டத்தில் உரம் தயாரித்தல் செயல்படுத்தப்பட உள்ளதால் யாருக்கும் பாதிப்புகள் இருக்காது.

**48) திருமதி.அகிலா:**

இவர் இத்திட்டத்தை எதிர்க்கவில்லை. ஆனால் நீர்நிலை பகுதியில் குப்பை கொட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். அதே இடத்தில் திட்டத்தை செயல்படுத்தாமல் மாற்று இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.

**49) திரு.ஆரோக்யரா, Exnora International:**

திட்டத்தை ஆதரித்து வரவேற்று நன்றி தெரிவித்தார்

**50) அன்புமணி, மருத்துவர்:**

ஆட்சேபித்து எதிர்ப்பு தெரிவித்தார். மருத்துவ ஆய்வின்படி உடல்நலம் பாதிக்கப்படுகிறது. சுகாதாரக் கேடு உள்ளாகிறது. சதுப்பு நிலத்தில் குப்பைகள் கொட்டப்படக் கூடாது. இங்கு வசிக்கும் தாய்மார்களின் தாய்பால் விஷமாகி உள்ளது.

இதற்கு ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் பதிலளிக்கையில் மேற்கண்ட கருத்தை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் எவ்வித ஆய்வும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

**51) திரு.ராமச்சந்திரன்:**

திட்டத்தை ஆதரித்து நன்றி தெரிவித்தார்

**52) திருமதி. எஸ்.எம்.வேம்பாத்தாள், 41–வது வாடு உறுப்பினர்:**

திட்டத்தை ஆதரித்தும் வரவேற்றும் பேசினார்.

**53) துரைராஜ், வார்டு உறுப்பினர் :**

ஆதரித்து திட்டத்தை விரைந்து செயல்படுத்தக் கோரினார்.

**54) திரு சீனிவாசன்**

நல்ல திட்டம், நன்றி

**55) திரு ராஜ்குமார்**
திட்டத்தை ஆதரித்து பேசினார்

**56) குமார் – எக்ஸ்னோரா**
திட்டத்தை ஆதரித்துப் பேசினார்

**57) அன்னபூரணி மோகன், பெருங்குடி**
திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும் மாநகராட்சிக்கு நன்றி

**58) சாந்தி, 155வது வார்டு உறுப்பினர்**

திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும், மாநகராட்சிக்கு நன்றி

**59) சீனிவாசன், Secretariat Colony**
மிக சிறந்த திட்டம்

**60) தனசேகரன், 130–வது வார்டு உறுப்பினர்**
நல்ல திட்டம், வரவேற்கிறேன், விரைவில் செயல்படுத்த வேண்டும்

**61) ஸ்டான்லி**

இவர் இத்திட்டத்தை ஆதரித்தார். மேம்பாலங்கள் கட்டியதில் சென்னை மாநகராட்சி எப்படி சிறந்து விளங்கியதோ அதேபோல் இக்குப்பை கொட்டும் வளாகத்தின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும்.

**62) திரு.பெரியசாமி, தலைவர், சாய் நகர் அசோஷியேசன்:**

MSW Rulesபடி Source Segregation செயல்படுத்தப்பட வேண்டும், எந்த குப்பையும் எரிக்கக்கூடாது. நீர் நிலைக்கு அருகாமையில் இத்திட்டம் செயல்படுவது சட்டத்திற்குப் புறம்பானது. இத்திட்டத்திற்கு 3 ஏக்கர் நிலம் மட்டுமே போதுமானது. நகரிலேயே 10 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டத்தை செயல்படுத்தலாம் என்றார்.

**63) திருமதி.பி.எல். கல்யாணி, 39–வது வார்டு உறுப்பினர்:**

திட்டத்தை பாராட்டி, வரவேற்று ஆதரித்து நன்றி தெரிவித்தார்.

இறுதியாக ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்கள் கூறுகையில் இத்திட்டத்தில் முக்கிய கூறுகளான குப்பை தரம் பிரித்தல், மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரித்தல், எரிதன்மை உள்ள கழிவுகளிலிருந்து எரிகட்டி தயாரித்தல் மற்றும் கற்கூளங்களிலிருந்து செங்கற்கள் தயாரித்தல் மட்டுமே இடம் பெற்றுள்ளதாகவும் இத்திட்டத்தை ஏற்கனவே கடந்த 30 ஆண்டுகளாக குப்பை கொட்டப்பட்டு வரும் வளாகத்தில் நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ன்படி செயலாக்கப்பட உள்ளது என்று தெரிவித்தார். மேலும் வரும் நிதியாண்டில் அதாவது 2010–11ல் திடக்கழிவுகளை அவைகள் உருவாகும் இடத்திலேயே பிரித்து அளிக்கும் திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி மன்றத்தில் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், அனைத்து குப்பைகளும் பதனிடப்படப் போவதாகவும் தெரிவித்தார்.

இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து கூட்டத்தை நிறைவு செய்தார்.

இக்கூட்டத்திற்கு வருகைப் பதிவேட்டின்படி 790 பொது மக்கள் கலந்துகொண்டனர். இதில் தமது கருத்துக்களை தெரிவித்த 63 நபர்களில் 48 நபர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். 8 நபர்கள் இத்திட்டத்தினை எதிர்த்தும் 7 நபர்கள் நடுநிலையாகவும் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு, பொதுமக்களிடம் எழுத்துபூர்வமாக பெறப்பட்ட கருத்துக்கள், நிகழ்ச்சியை பதிவு செய்யப்பட்ட ஒலி, ஒளி குருந்தகடு ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்,